# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

2355/09 - 2023 ඔක්තෝබර් මස 23 වැනි සඳුදා - 2023.10.23

*2355/09 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு**

அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 45(2) ஆம் உறுப்புரையின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்து, பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் பணிகள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் 2023, ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, அமைச்சரவை அங்கத்தவர் அல்லாத அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சர் கௌரவ ரஞ்சித் சியம்பலாபிட்டிய அவர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

**ரணில் விக்கிரமசிங்க,**
*சனாதிபதி.*

*சனாதிபதி அலுவலகம்,*
*கொழும்பு 01,*
*2023, ஒற்றோபர் 23.*




*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

**அமைச்சரவை அங்கத்தவர் அல்லாத அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| **கடமைகளும் பணிகளும்** | **திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்** | **நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்** |
| 1. அரசினால் செயற்படுத்தப்படும் தேசிய கொள்கைகளின் அடிப்படைக்கமையத் தாபிக்கப்பட்ட நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் விடயத்துடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்<br><br>2. அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள் சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேய ரீதியிலும் பெற்றுக்கொடுத்தல்<br><br>3. வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழித்துக்கட்டி அமைச்சின் பணிப்பொறுப்பு நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு உதவும் நவீன முகாமைத்துவ முறைகளையும் தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் திட்டங்களையும் மீளமைத்தல்<br><br>4. அரச பெருந்தோட்ட தொழில் முயற்சிகளை மீள்கட்டமைத்தல் மற்றும் II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்குத் தேவையான மறுசீரமைப்புகளை அறிமுகம் செய்வதன் மூலம் அவற்றின் உற்பத்தி திறன் மற்றும் அந்த நிறுவனங்கள் மூலம் ஈட்டப்படும் வருமானத்தை அதிகரித்தல்<br><br>5. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்கான நடவடிக்கைகளும்<br><br>6. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எல்லா நிறுவனங்களையும் கண்காணித்தல் | 1. ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபை<br><br>2. வரையறுக்கப்பட்ட களுபோவிட்டியன தேயிலைத் தொழிற்சாலை<br><br>3. இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்<br><br>4. வரையறுக்கப்பட்ட எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனி<br><br>5. வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி<br><br>6. வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி | • (1958 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க) இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபன சட்டம்<br><br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டு வரப்படாதவையும் இங்கு II ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டவாக்கங்களும் |

EOG 10 - 0253

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.